
4 கல்யாணமாம் கல்யாணம்!
தமிழ்
மூன்றாம் வகுப்பு

# 4 கல்யாணமாம் கல்யாணம்!

3M5MCG

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்
யானை மேலே ஊர்கோலமாம்
ஒட்டகச்சிவிங்கி நாட்டியமாம்
கொர்கொர் குரங்கு பின்பாட்டாம்
தடபுடலான சாப்பாடாம்



பார்த்துவிட்ட பெண்ணின் தாயும்
பலத்த சத்தம் போட்டாளாம்
திருட்டு மாப்பிள்ளைக்கு என் பெண்ணை
திருமணம் செய்ய முடியாது
வேண்டாம் இந்த சம்பந்தம்
வெட்கக்கேடு போய் வாரிரோம்

– நாட்டுப்புறப் பாடல்


L arning centre tamil
பூனைக்கும் பூனைக்கும்
கல்யாணமாம்....



தாலிகட்டும் வேளையிலே
மாப்பிள்ளை பூனையக் காணோமாம்
சந்தடி புந்தடி செய்யாமல்
சமையல்கட்டில் நுழைந்தாராம்
வாங்கிவெச்சப் பாலையெல்லாம்
ஒரே மூச்சில் குடித்தாராம்

# ஆமை சமையல் செய்தல்



## சிந்திக்கலாமா?



இப்பாடலில் வரும்
பூனைக்கும்
பூனைக்கும் பதிலாக
யானைக்கும்
பூனைக்கும்
கல்யாணம் ஏற்பாடு
செய்திருந்தால்
எவ்வாறு இருக்கும்?

வகுப்பறையில்
பேசுக.

